# 5 மாதத்துக்குள் 1000 நேரடி தொலைபேசிகள்


பக்கங்கள் எட்டு | விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 58 செவ்வாய் 03-04-1990 (பங்குனி 21) ரம்ழான் 06


## யாழ், திருமலை மாவட்டங்களுக்கு

யாழ், திருமலை மாவட்டங்களுக்கு 1000 நேரடித் தொலைபேசி இணைப்புகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் வழங்கப்படவுள்ளன. அதில் 500 இணைப்புகள் யாழ்ப்பாணத்திற்கும் 500 இணைப்புகள் திருமலைக்கும் வழங்கப்படவுள்ளன, யாழ்ப்பாணத்திற்கான இணைப்புகளில் 72 இணைப்புகள் முல்லைத்தீவு, கிளிநொச்சி. மாங்குளம் பகுதிகளுக்கு வழங்கப்படவுள்ளன. திருமலைக்கான இணைப்புகளில் 72 இணைப்புகள் புல்மோட்டை, நிலாவெளி, தம்பலகாமம், பகுதிகளுக்கு வழங்கப்படவுள்ளன. யாழ் மாவட்டத்திற்கான இணைப்புகள் யாவும் மைக்ரோவேவ் மூலம் அனுராதபுரம் பரிவர்த்தனை நிலையம் ஊடாக வழங்கப்படும். இத்திட்டத்திற்கு உலக வங்கி 70 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இத் திட்டம் 8ஆம் பக்கம் பார்க்க

## யாழ்மாவட்ட அரச காணியில் சட்டவிரோதமாக இருப்போருக்குத் தகுதியிருப்பின் காணி அவர்களுக்கே

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோதமாகக் குடியிருப்பவர்களுக்கு தகுதி இருந்தால் அந்தக் காணிகள் அவர்களுக்கே வழங்கவுள்ளதாக தெரியவருகின்றது. காணியற்றவர்களுக்கு காணி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது ஆனால் தகுந்த காரணங்கள் காட்டப்பட்டால் மட்டுமே அரச காணிகளில் குடியிருப்பவர்களுக்கு அந்தக் காணிகள் வழங்கப்படும். எனினும் சிவில் நிர்வாகம் ஒழுங்காக அமுல்படுத்தப்பட்டு நிதிமன்றங்கள் இயங்கிய பின்னரே இதுபற்றிச் சரியான முடிவெடுக்கப்படுமென அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக குடியிருப்பவர்கள் பலர் காணிபெறத் தகுதியுடையவர்கள் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது, (03)

# பிரபாகரனை சந்திக்க ஈரோஸ் ஆவல்

# சந்தேகங்கள் தீருமென நம்பிக்கை

## பிரபாகரனை மகிழ்ச்சியோடுவரவேற்கும் மக்களோடு ஈரோஸ் இணைகிறது,

தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை மகிழ்ச்சியோடு வரவேற்கும் மக்களோடு தாமும் இணைந்து கொள்வதாகவும், பிரபாகரனைச் சந்திப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதோடு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் ஈரோஸ் வட்டாரங்கள் நேற்று முரசொலிக்குத் தெரிவித்தன,

விடுதலைப் புலிகள் இயக்கம் ஈரோஸ் இயக்கத்தின் மீது கொண்டுள்ள சந்தேகங்கள் இச்செய்தியைபடுத்து சுமுகமாக தீரும் என தாம் உறுதியாக நம்புவதாக ஈரோஸ் இயக்க வட்டாரங்கள் முரசொலிக்குத் தெரிவித்துள்ளன

ஈரோஸ் இயக்கம் பற்றி புலிகளுக்கு சில சந்தேகங்கள் உள்ளன. அதை அவர்களுடன் தெளிவுபடுத்திக்கொண்டே ஈரோஸ் உடனான உறவை சீர்படுத்துவது குறித்து முடிவு செய்யப்படும் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்று முன்தினம் முரசொலிக்கு தெரிவித்திருந்தார்.

— 8-ஆம் பக்கம் பார்க்க

## மட்டுநகரில் க.பொ.த பரீட்சையில் ஆள்மாரூட்டம் செய்தோர் வீதியில் நிறுத்தம்

நேற்று மட்டக்களப்பு சிசிலியா மகளிர் கல்லூரியில் க, பொ. த. சாதாரண தரப் பரீட்சையின்போது ஆள் மாரூட்டம் செய்த ஆறு இளைஞர்கள் விடுதலைப் புலிகளிடம் அகப்பட்டுக்கொண்டனர். விடுதலைப் புலிகளிடம் தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட அறுவரும் மட்டக்களப்பு நகரில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தின்கீழ் மக்களின் பார்வைக்கு விடப்பட்டனர். பரீட்சையில் ஆள் மாரூட்டம் செய்து தண்டிக்கப்பட்டோம் இனிமேல் யாரும் இப்படிச் செய்யாதீர்கள் புலிகள் மிகவும் கண்காணிப்பாக உள்ளனர் என்ற அட்டைகளை கழுத்தில் மாட்டிய நிலையில் இவர்கள் காணப்பட்டனர், — 8-ஆம் பக்கம் பார்க்க

## மட்டு. மெயில்ரயிலில் திட்டமிட்ட கொள்ளை கைக்குவந்த அடகுநகை கள்ளனிடம் போனது

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து மட்டுநகர் வந்த இரவு ரயிலில் ஐம்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் முப்பதாயிரம் ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம்பற்றித் தெரியவருவதாவது, மாகோவிலிருந்து ரயில் புறப்பட்டு சிறிது நேரத்தில் ரயில்மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ரயில் திடீரென நின்றதும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொள்ளையன் ரயிலில்பயணம்செய்துகொண்டிருந்த திருமலையைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து ஐம்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் இன்னொருவரிடமிருந்து ரொக்கப்பணத்தையும் எடுத்துக்கொண்டு காட்டுக்குள் இறங்கி ஓடிவிட்டான்.

நகையைப்பறிகொடுத்தவர் மட்டக்களப்பில் அடகுவைத்த தனது நகைகளை கொழும்பு மக்கள் வங்கியிலிருந்து மீளப் பெற்றுக்கொண்டு திரும்பிய

— 8-ஆம் பக்கம் பார்க்க

## புது வருடத்தை முன்னிட்டு விசேட யாழ்-கொழும்பு ரயில்

புதுவருட தினத்தை முன்னிட்டு வடபகுதிக்கு விசேட ரயில் சேவைகள் இடம்பெறவுள்ளன. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 6-ம் திகதியும் 12-ம் திகதியும் இரவு 10 மணிக்கு ரயில்சேவை கொழும்புக் கோட்டையில் இருந்து இடம்பெறும்

காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக்கு 9-ம் திகதியும்

— 8-ஆம் பக்கம் பார்க்க

### கஸ்தூரியார், ஸ்ரான்லி வீதிச் சந்தியில்

## நான்கு நாட்களாக நாறிக்கிடக்கும் நாய்

கடந்த நான்கு நாட்களாக யாழ் நகரின் மத்தியில் உள்ள வின்ஸர் தியேட்டர் சந்தியில் இறந்து கிடக்கும் நாயின் சடலம் இன்றுவரை அப்புறப்படுத்தப்படவில்லை, இதனால் அவ்வீதியால் செல்லும் பல மக்கள் மூக்கைப்பொத்தியபடியே செல்கின்றனர்கள். நேற்று இந்த நாயின் சடலத்தின் மேல் 8-ம் பக்கம் பார்க்க

### யாழ். உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி

## மா, பாண் நியாய விலையில் விற்குமாறு வேண்டுகோள்

அடிக்கடி மாவினது விலையில் ஏற்படும் மாற்றத்தினால் வியாபாரிகள் தம்விருப்பப்படி மாவை விற்பதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது

ஒரு கிலோ மாவினது சில்லறை விலை 13 15 சதமாகும் மொத்த விற்பனை விலை12 70 சதம் உணவுக் களஞ்சிய விலை 12 35 சதமாகும்.

450 கிராம் பாணின் விலை 4.90 சதம் வியாபாரிகள் நியாயமான விலையில் மாவையும் பாணையும் விற்பனை செய்யும்படி யாழ் மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி அறிவித்துள்ளார். (03)

## மேலதிக படங்கள் தகவல்கள் உள்ளே நடுப் பக்கங்களில்



## சிறு விளம்பரம்

### தேவை

தமிழ் தட்டெழுத்தில் நல்ல தேர்ச்சியுள்ள பெண்கள் தேவை. நற்சான்றிதழ்களுடன் காலை 8.30-4.30 இற்குள் நேரில் வரவும். BOND BOOK STALL 58A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 04015

### தவறிவிட்டது

வாணி-கொடிகாமம் வீதியில் தவறிய எனது பாஸ்போட்டைக் கண்டெடுத்து ஒப்படைப்பவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு- வே. கஜேந்திரன் களனே புலோலி மேற்கு, பருத்தித்துறை. 04025

## சங்க ஊழியருக்கு தேநீர் அலவன்ஸ்

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் ஊழியருக்கு இம்மாதம் தொடக்கம் தேநீர் அலவன்ஸ் பணம் சங்க நிர்வாகத்தினால் வழங்கப்படுவுள்ளது.

இது தொடர்பாக கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் சங்கானை கிளை விடுத்திருந்த கோரிக்கையை அடுத்து சங்க இயக்குநர்சபை இந்த அலவன்ஸை வழங்குவதற்கு தீர்மானித்திருப்பதாக சங்கத் தலைவர் திரு. வை. செந்தில்நாதன் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (13)

## யானை தாக்கி மரணம்

யானை தாக்கியதால் மைக்கல் குணதிலக என்ற பொலிஸ்காரர் மரணமானார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு அரங்கல பொலிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த ஹபரவ காட்டுப்பகுதியில் நிகழ்ந்தது.

பொலிஸாரின் தேடுதல் நடவடிக்கையின் போதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

## அலுவலகம் அமைப்பு

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கட்சி பிரதேசச் செயலகம் பருத்தித்துறையிலும் மாணவர் இயக்க வடமராட்சிப் பிரதேசச் செயலகம் நெல்லியடியிலும் அமைக்கப்பட்டு செயற்பட்டுவருகின்றது. (44)

## மாதகலில் புதிய மாடிக்கட்டிடம்

மாதகல் சென், ஜோசவ் கல்லூரியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் இரு மாடிக் கட்டிடமொன்று சுமார் மூன்றரை இலட்ச ரூபா செலவில் நிறுவப்படவுள்ளது.

யாழ். கல்வித் திணைக்களத்திடமிருந்து ரெண்டர் மூலம் தனியார் ஒருவர் இக்கட்டிட வேலைகளை பொறுப்பேற்றுள்ளார். இடிந்து சேதமடைந்த பழைய கட்டிடம் அமைந்திருந்த இடத்திலேயே இந்த மாடிக் கட்டிடம் நிறுவப்படவுள்ளது. (13)

யாழ். மாவட்டத்தில்

## மேலுமொரு உணவுக்களஞ்சியம் விரைவில் அமைக்கப்படும்.

வடமாகாண மக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு, அவர்களது அன்றாட உணவு மற்றும், அத்தியாவசியப் பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கேற்ற விதத்தில், அப்பொருட்கள் முழுவதையும் சேமித்து வைப்பதற்கான உணவுக் களஞ்சியக் கட்டிடமொன்று வெகு விரைவில் நிறுவப்படவுள்ளதாக; யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ் ஐ. நித்தியராஜ் தெரிவித்துள்ளார்.

மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற யாழ். தேசியக் கூட்டுறவு மகளிர் தினவிழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்:- ''உலகிலேயே முதன் முதலாகப் பெண் பிரதமரைத் தெரிவு செய்த பெருமைக்கும்; சிறப்புக்குமுரிய நமது நாட்டில் இன்னுங்கூடச், சில இடங்களில் உரிய பதவியும், மதிப்பும் அளிக்கப்படுவதில்லை இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வண்ணம், யாழ். மாவட்டத்தில் இயங்கும் 22 பலநோக்குக் கூட்டுறவுச் சங்களிலிருந்தும், ஒவ்வொரு பெண்ணாவது. கூட்டுறவு இயக்குநர்களாகத் தெரிவு செய்யப்படவேண்டும் என்பதை, இந்தச் சர்வதேச மகளிர் ஆண்டிலே வற்புறுத்திக் கூற விழைகின்றேன்,'' எனச் சொன்னார்.

## கோக்குவிலில் ரயில் சாரதிக்கு கோழிமுட்டை அபிஷேகம்

ரயில் சாரதிக்கு கோழிமுட்டையும், தண்ணீரும் வீசி எறியப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டது. யாழ். வளாகத்துக்கருகில் ஆத்திசூடி வீதியில் ஏப்ரல் முதலாம் திகதியான நேற்று மூன்தினம் கில்லாடித்தனமான இச் செயல் நடக்கலாயிற்று. இதனால் கொழும்பு செல்ல வேண்டிய ரயில் குறிப்பிட்ட இடத்தில் சில நிமிட நேரம்தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதுடன் இது குறித்து மேற்படி சாரதியால் மேலிடத்துக்கு புகார் தெரிவிக்கட்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (41)

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

வட்டக்கச்சி இரணைமடு அருள் மிகு ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலய அபிவிருத்திக்கான பரிபாலன சபையால் விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டுக்கள் நாளை புதன்கிழமை (4.4.90) ஆலய மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும். பரிசு பெற்ற இலக்கங்கள் முரசொலியில் பிரசுரிக்கப்படும்.

இப்படிக்கு
மா. சிவநேசன்
செயலாளர்
04027

## UNIVERSITY OF JAFFNA

### TENDER NOTICE

Tenders are invited for the conversion of ground floor Mathematics block as Computer laboratory from Contractors Registered with University of Jaffna for Civil Engineering works for Rs. 1, 000, 000/= and over.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 04.04.90-06 04 90 on Producing a receipt from Bursar, University of Jaffna on payment of;

Non-refundable: Rs 500/-
Refundable ; Rs. 2,500/-

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 23.04.1990 at 10 00a.m.


Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

Registrar
University of Jaffna.

04001

## அழைப்பிதழ்

### அந்தியேஷ்டியும் சபிண்டீகரணமும்



### அமரர் கந்தையா இராமலிங்கம் அவர்கள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 12 - 1910 | 06 - 03 - 1990 |

எமது பேரன்பிற்குரிய இல்லத் தலைவரின் ஆத்ம சாந்திக்காக 05-04-1990 வியாழக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 2 00 மணிவரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கிரியைகளிலும், மகேஸ்வர பூசையிலும் கலந்து கொள்ளுமாறு தங்களைப் பேரன்புடன் அழைக்கின்றோம்,

தளமியன்,
கரணவாய் தெற்கு
கரவெட்டி

இங்ஙனம்
திருமதி வ. இராமலிங்கமும்
மக்களும் மருமக்களும்
4003

## விடியலுக்கு வித்தான அன்னை பூபதிக்கு எங்கள் கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்குகின்றோம்



காக்க வந்தோம் என்று கூறினோர்
கைகள் அசைத்தே வந்தனம் காட்டினோர்
தாக்கி எங்களின் தமிழரை அழிக்கையில்
தட்டிக் கேட்குமோர் தாயாக எழுந்து
அகிம்சை வழியில் போராட்டம் நடத்தி
அண்ணல் காந்தியை விஞ்சிய தலைவி
தமிழீழ மக்களின் தாயாகிவிட்டாள்
தரணியில் எங்கும் நிலையாகிவிட்டாள்
புதிய விடியலைக் காணத்துடித்து
புரட்சிப் பெண்ணாய் மரித்து விட்டாள்
வாழ்க அன்னை பூபதி நாமம்
வளர்க எங்கும் விடுதலை உணர்வு

நெல்லியடி பிரதேச மக்கள்

04026

# இதயநாதம்

செவ்வாய்க்கிழமை 03-04-1990

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்


**நல்வாக்கு**

தொலை தூரத்திலிருந்து வரும் ஒருவர் நன்றாகப் பொய் பேசலாம்.

-பிரெஞ்சுப்பழமொழி

## வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி

நீண்டகாலமாக நிலவி வந்தவதந்திகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைத்தாயிற்று.

கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக இந்திய இராணுவத்துடனான மோதல் நடைபெற்று வந்துள்ளது.

இந்த மோதல் உச்சமடைந்த காலப்பகுதியிலிருந்து பல்வேறு விதமான வதந்திகள் பரவிக்கொண்டிருந்தன- இல்லை பரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

தமக்கிருந்த வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்ற வெகுஜனத் தொடர்புச்சாதன வசதிகளையெல்லாம் முற்றாகப் பயன்படுத்தி அவர்கள் இவ்வாறான திட்டமிட்ட பிரசாரத்தில் இறங்கினர்

பிரபாகரனுக்கும், அவரது நெருங்கிய சகாவுக்குமிடையே காட்டுப் பகுதியில் தொடர்ச்சியாக மோதல் நடக்கிறது.

பிரயாகரனுக்குப் பலத்த காயம். அவர் நடக்க முடியாதவராகி விட்டார். அவர் பேச முடியாதவராகி விட்டார். படுத்த படுக்கையாகத்தான் இருக்கிறார் என்றவாறெல்லாம் செய்திகள் வேகமாகப் பரப்பப்பட்டன.

இவற்றிற்கெல்லாம் அப்பால் அவர் கொல்லப்பட்டு விட்டார் என்றே வதந்திகள் பரப்பப்பட்டன.

பிரயாகரன் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் எதுவுமில்லை. அப்படி இருந்தாலும் எழுந்து நடமாடிச் செயற்பட முடியாதவராகத்தான் இருப்பார் என வவுனியாக் காட்டிற்குள் விடுதலைப் புலிகளுடனான மோதலில் நேரடியாக ஈடுபட்ட இந்திய இராணுவ ஜவான் ஒருவர் தெரிவித்ததாக ஒரு வதந்தி.

விடுதலைப்புலிகளின் தகவற் தொடர்புகளை ஒட்டுக்கேட்டபோதும் இவ்வாறான தகவல்கள் கிடைத்ததாகச் செய்திகள் பரப்பப்பட்டன

அவரது மகள் இறந்துவிட்டாள். அவரது மனைவியும் கூடக் கொல்லப்பட்டிருக்கலாம் என்றவாறும் வதந்திகள் பரவின.

அதுமட்டுமன்றி விடுதலைப்புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டார்கள். இனி அவர்களின் கதை முடிந்தது என்றவாறும்கூட வதந்திகள்.

இந்திய இராணுவம் இவ்வாறான வதந்திகளைப் பரப்பி விடுதலைப் புலிகளை மக்கள் மத்தியிலிருந்து ஒழித்துக்கட்டிவிடலாமெனக் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்பட்டது.

இலங்கையும் கூட முன்னர் இவ்வாறான வழிகளில் முயற்சி செய்து தனது மூக்கை உடைத்துக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமன்றி இவ்வாறான வதந்திகள் துண்டுப்பிரசுரங்களாக வட-கிழக்குப் பகுதி எங்கும் விமானம், ஹெலி மூலமாகவும் ஆகாயத்திலிருந்து போடப்பட்டன.

இவையாவும் தமிழ் மக்களின் போராட்டத்தை முறியடிக்க அரசு செய்த திட்டமிட்ட சதி முயற்சிகள் என்பதை மக்களனைவரும் புரிந்து கொண்டனர்.

இதற்குப் பின்பும் இந்திய இராணுவத்துடனான மோதலில் இந்திய அரசால் இவ்வாறான வதந்திகள் பரப்பப்பட்டன.

இவையாவும் சுத்தப்பொய் என்று தூக்கியெறியும்வண்ணம் இந்த வதந்திகளையெல்லாம் முறியடித்து தலைவர் பிரபாகரன் பத்திரிகையாளர் முன் தோன்றியுள்ளார்.

விடுதலைப்புலிகள் பற்றிய 'ரோ' வினுடைய தப்புக்கணக்கு எவ்வாறு இந்திய இராணுவத்தை மண்கவ்வ வைத்ததோ அதுபோல அவர்கள் திட்டமிட்டுப் பரப்பிய இந்த வதந்திகளும் அவர்களை மண்கவ்வ வைத்துள்ளன.

வதந்திகளால் விடுதலைப்புலிகளையோ, தமிழ் மக்களின் போராட்டத்தையோ ஒருபோதும் பின்தள்ள முடியாது என நிரூபித்து இந்த வதந்திகளுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்தாயிற்று.

# இந்திய-பாக். மோதல் நிகழ்ந்தால் இப்போதைய நிலையில் வெல்வது...

(... ...நேற்றைய தொடர்ச்சி)

ஜரிப்-எ-மொமின் என்ற பெயரில் பாகிஸ்தான் நடத்திய ராணுவஒத்திகையைக்கவனித்த ராணுவ மூளைகள், வடக்குத் தெற்காக பாகிஸ்தான் ராணுவ ரிசர்வ் படைகள் மிக மிக சக்திவாய்ந்தவை என்று கணக்கிட்டுள்ளன.

சமதள பிராந்தியத்தில் சண்டை நடக்கும்போது வெற்றியை முடிவு செய்வது டாங்கிப் படைதான். இதிலும் நவீன தொழில் நுட்ப முன்னேற்றத்தால் நிலைமை அடியோடு மாறிவிடுகிறது இரவு நேரத்திலும் வெப்பமானிமூலம் பாதை அறியும் கருவி வந்து விட்டதால் டாங்கிச் சண்டை பகலில் மட்டுமல்ல, இரவிலும் நடக்கமுடியும். லேசர் உதவியால் துல்லியமாகக் குறி பார்க்கமுடிகிறது.

இந்தியா, டி-72 ரக சோவியத் டாங்கிகளை வாங்கியிருக்கிறது. இது பாகிஸ்தானிடமுள்ள சீனத் தயாரிப்பான டி-59 டாங்கிகளை விட நிச்சயம் அதிக சக்தி உள்ளவை. டி-72ன் மூர்த்தி சிறிது; ஆனால், கீர்த்தி பெரிது. சிறிதாக இருப்பதால் இதை எதிரி கண்டு பிடிப்பது சிரமம். இது மிக நவீனமானது. ஆட்டோமேட்டிச்லோடிங் வசதி உண்டு மிகப்பெரிய குண்டுகளைப் பாய்ச்சக் கூடியது. வழக்கமான குண்டுகள் தாக்கினால் பாதிக்கப்படாத விசேஷ உருக்குத் தகட்டால் ஆன கவசம். இதனுடன் ஒப்பிட்டால் பாகிஸ்தான் டாங்கிகள் பழைய மாடல்தான்.

சுந்தர்ஜியின் பணிக்காலத்தில் இன்டஸ்ட்ரி பிரிவை இயந்திரமயமாக்குவதில் வேகம் ஏற்பட்டது. இதன் விளைவாக 'ராப்பிட்' என்ற சீரமைக்கப்பட்ட சமதள தரைப்படை டிவிஷன் உருவாயிற்று. மற்ற தரைப்படை டிவிஷனை விட இதற்குத் தாக்கும் சக்தி குறைவு. ஆனால், இது அதிவேகமாகச் செயல்படக் கூடியது. குறிபார்ப்பதில் அதிகம் ஆற்றல். வேவு பார்க்கும் திறமை, டாங்கி எதிர்ப்பு சக்தி எல்லாம் கொண்டது.

இரு ராணுவங்களின் ஆர்ட்டிலரி பிரிவிலும் சக்திவாய்ந்த பீரங்கிகள் வந்திருக்கின்றன. ஏராளமாக கடும் சக்தி, வெகு தூரம்வரை குண்டு செலுத்தும் சக்தி 'சுட்டதும் சட்டென்று நகர்ந்து' கொள்வதால் தானே எதிரி குண்டுக்கு இலக்காகாமல் தப்புவது போன்ற வசதிகள் நிறைந்த பீரங்கிகள் இவை.

இருதரப்பிலும் ஏற்பட்டுள்ள ராக்கெட் செலுத்தும் படைகள் தான் பயங்கரமானவை. இந்திய ராணுவத்திடம் உள்ள பி.எம். 21 ராக்கெட் லாஞ்சர், 20 செக்கண்டில் 240 ராக்கெட்டுகளை ஏவி ஒரு சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பை சின்னபின்னமாக்கக்கூடியது.

'சுருக்கமாக காட்டமான' சண்டை, நடந்தால் சமதளப் பாலைவன போர்க்களத்தில் தான் நடக்கும். அங்கே இரு தரப்பில்யாருக்கும் சாதகமாகப் போகாது. ஆக்கிரமிக்கும் பாகிஸ்தான், தன் டாங்கி டிவிஷன்களைக் கொண்டு மின்னல் வேகத் தாக்குதல் நடத்தும். பயங்கர அழிவு வேலை நடத்தும்; இந்திய ராணுவத்தின் ஆள்பலமும், டி72-டாங்கிகளும் போரின் திசையை மாற்றுவதற்குள் இதெல்லாம் நடந்துவிடும். ஆக டாங்கிச் சண்டை என்றால் பழையபடி இல்லை. அறிவாற்றலுக்கே சவால்' இண்டியன் டிஃபென்ஸ் ரெவ்யூ ஆசிரியர் பகுதிஆலோசகர் சங்கர் பாதுரி சொல்கிறார்: ''சுருக்கமான சண்டையில் ஆயுத சக்தியைக்காட்டிலும் ராணுவத் தலைமையின் தரமும் அறிவாற்றலும் தான் முக்கியம் ''

பாகிஸ்தான் முதலில்தாக்குவதாக வைத்துக்கொண்டு ராணுவ நிபுணர்கள் பலவித யுத்தக் காட்சிகளைக் கற்பனை செய்து வைத்திருக்கிறார்கள் வழக்கம்போல சாம்செக்டரில் அரைமனதுடன் பாகிஸ்தான் படையெடுக்காது; மாறாக ஷக்கர்கர் வளைவில் முழுவேகத் தாக்குதல் நடத்தும் காஷ்மீர் பள்ளத் தாக்கு மக்கள் மனதில் பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பூஞ்ச்போன்ற எல்லையோர நகரங்களைக் கைப்பற்றும். இதற்கிடையில் பள்ளத்தாக்கில் ஆயுதம் தாங்கிய கலவரம் ஏற்படுத்துவார்கள்' இந்தியப் படைகளை நிலைகுலையச் செய்வது நோக்கம். இப்படி யெல்லாம் செய்து இந்திய ராணுவத்தின் ரிசர்வ் பிரிவை, பதிலடி கொடுப்பதில் ஈடுபடுத்திக் காலங்கடத்துவது தந்திரம்.

இந்தியா அழுது புலம்பிக் கொண்டு பதிலடி கொடுக்காது பாகிஸ்தான் படைகளை வெளியேற்றுவதற்காகத் தன் தாக்குதல் படையை ஈடுபடுத்தாமல் சுற்றிவளைத்துச் சென்று பாகிஸ்தானின் போர் முனைப் படைகளுக்கு வரும் உணவு சப்ளை வழியை மறிக்கும்.

பாகிஸ்தான் ராணுவம் முதலில் தாக்கினால் இந்திய ராணுவம் பல பதில் நடவடிக்கைகள் எடுக்க வாய்ப்பு உண்டு. பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதிக்குள் பெரிய அளவில் படையெடுப்பு நடத்திப் பல முக்கியமான நகரங்களைக் கைப்பற்றுதல், பாகிஸ்தான் தாக்குதல் படைகள் இரண்டையும் அழித்தல் (இதில் இந்திய விமானப்படையின் அதீத சக்தி மிக முக்கிய பங்காற்ற முடியும்). ஒரு சில முனைகளில் பாகிஸ்தானின் கை ஓங்கியிருந்தாலும் நிலைகுலையாமல், திருப்பித் தாக்கிப் படையெடுப்பை வெளியேற்றிக் கொண்டிருக்காமல், இந்திய விமானப் படையின் பாதுகாப்புடன். பாகிஸ்தான் பகுதிக்குள் வெகு தூரம் முன்னேறிப் போக வேண்டும். இந்தப் படையெடுப்புக்கு உகந்த இடம் அநேகமாக பஞ்சாபின் இரண்டு சமவெளிகளுக்கு இடைப்பட்ட பாலைவனமாகத்தான் இருக்கும். இந்தியாபோரைநீட்டித்து அதன் மூலமே சாதகம் அடையும். திடீர் தாக்குதல்கள் நடத்தி எதிரியை நிலைகுலையச் செய்யும். இதுதான் இந்திய யுத்த தந்திரம்.

இந்திய விமானப்படையில் உள்ள விமானங்களின் ஆற்றலை வைத்துப் பார்த்தால், இந்தியாதான் ஆகாய வீதியில் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பது நிபுணர்கள் கருத்து. ''ஆகாயப் போர் முனையில் அவர்களைச் சக்கையாகப் பிழிந்து விடுவோம்'' என்கிறார் ஜஸ்ஜித் சிங்: இவரே இந்திய விமானப்படை சண்டை விமானியாக இருந்தவர்' மற்றவர்களுக்கு இவ்வளவு நம்பிக்கை இல்லை. இந்திய விமானப் படையின் ஜாகுவார்விமானங்கள்பாகிஸ்தானில் உள்ள எல்லா இலக்குகளையும் தாக்க முடியும் அதே சமயம் பாகிஸ்தான் விமானப் படையின் எப் 16 விமானங்கள் இந்திய நகரங்களைத் தாக்க முடியும். பூனா போன்ற ஜனத் தொகை மிதந்த நகரங்கள், பம்பாயின் அணுசக்தி நிலையம், கப்பற்படை தளங்கள் இவற்றைத் தாக்க முடியும். தற்போது பாகிஸ்தானிடம் எப் 16 விமானங்கள் 45, மிராஜ் 3மிராஜ 5விமானங்கள் 90) (ஏவுகணைசெலுத்தக்கூடியவை சீனத்தயாரிப்பான எப் 7 ரக விமானங்கள் 72 உள்ளன. இவையும் மூன்றுஸ்க்வாட்ரன் ஏ 5 விமானங்களுமாக பாகிஸ்தான் விமானப்படைவழங்கும் 'போர்முனை ஆகாய கவசமாக அமைந்துள்ளன எப் 16 விமானங்களுக்குப் பிறகு தான் வாங்கியுள்ள 'கோப்ரா' தாக்குதல் ஹெலிகாப்டர்கள் பற்றி பாகிஸ்தானுக்கு ஒரே பெருமை.

'சுருக்கமாக காட்டமான, ஒரு யுத்தம் நடந்தால் 10 நாள் சண்டைக்குப் பிறகு இந்திய விமானப்படைக்கே வெற்றிவாகை. அதுவரை பாகிஸ்தான் பாதுகாக்க வேண்டிய ஆகாயப் பகுதி சிறியதாக இருப்பதால் சமபலத்துடன் தாக்குப் பிடிக்கும். இந்திய விமானப்படை இன்னும் புது தினுசுகளில் விமானம் வாங்கிப்போட்டுக் கொண்டிருக்கிறது. யுத்த தந்திரத்தை முடிவு செய்தாகவில்லை. 'இது இந்திய விமானப்படைக்கு ஆகாய வீதிச் சண்டையில் சாதகமான விஷயம்' என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

## 'இந்தியா டுடே' ஆய்வுக்கட்டுரை

எலெக்ரானிக் போர் முறையில் தான் பாகிஸ்தானுக்கு ஏற்றம்.

போரில் யாருக்கு வெற்றி என்பதை மின்னணுக் கதிர் சண்டை தான் நிர்ணயிக்கும். கடந்த பத்தாண்டுகளில் மின்னணு போர்முறை திடீர் வளர்ச்சி கண்டுள்ளது. 'கண்ணுக்குத் தெரியாத பலப்பெருக்கி' என்று இதைச் சொல்கிறார்கள். மின்காந்த, ஒளிக்கதிர் வகையில் சக்தி வாய்ந்த ராடார்களும், எதிரி ராடார்களைச் செயலிழக்கச் செய்யும் வழிமுறைகளும் தயார். இதற்கும் அடுத்த படியாக செயலிழக்கச் செய்யும் கருவியைச் செயலிழக்கச் செய்யும் கருவி' கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இந்திய ராணுவத்தின் ஓய்வுபெற்ற ஏர்வைஸ் மார்ஷல் வீர் நாராயண் சொல்கிறார்; ''ராடார் சண்டையில் ஜெயித்துவிட வேண்டும். அதில் ஜெயிப்பவருக்கே சாதகம்.

துணைக்கண்டத்தில் பயங்கர துல்லியமாக இலக்கைத் தாக்கும் தானியங்கி ஏவுகணைகள் ஏராளமாக வியாபித்துள்ளன அதனால் ராடார் சண்டைக்கு முக்கியத்துவம் கூடியுள்ளது. எக்ஸோசெட், மாத்ரா, ஸ்பாரோ, சைடு வைண்டர் என்று இரு தரப்பிலும் விதவிதமான ஏவுகணைகள். நேருக்கு நேர் சண்டை என்பதே இல்லாமல் செய்து விட்டது ஏவுகணைப் போட்டி. கொடுமையான வெடிமருந்து ஏந்தி தலைதெறிக்கும் வேகத்தில் 25 முதல் 100 கிலோ மீட்டர் வரை பாயக்கூடிய ஏவுகணைகள் இப்போது வந்துவிட்டன.

பிருத்வி ஏவுகணை ஒரு டன் வரை வெடிமருந்து ஏந்தி 250 கிலோ மீட்டர் வரை பாய்ந்து தரை இலக்குகளைத் தாக்கக் கூடியது. அதை வெற்றிகரமாக இந்தியா செலுத்திப் பார்த்து விட்டது. அதனால் இப்போது இந்தப் போர் முறையில இந்தியாவுக்குப் பெரிய சாதகம் ஒரு பிருத்வி ஏவுகணை ரூ 1.7 கோடி ஆகிறது, எனவே இது மிகக் குறைவாகவே பிரயோகிக்கப்படும். ஆனால், இது பாயும் தூரம், துல்லியமான தாக்கும் திறன் அதிகமாக இருப்பதால்பாகிஸ்தான் இலக்குகளை அழிக்க ஏவப்படலாம் பிருத்வியின் சக்திக்கு இணையாக ஹத்ஃப்-2 என்ற ஏவுகணையைப் பாகிஸ்தான் தயாரித்து ஏவிப்பார்த்தது என்று சொல்லப்படுகிறது.

கடந்த ஒரு வருடத்தில் பாகிஸ்தான் கப்பற்படையை விஸ்தரித்ததையடுத்து கடற்படை விஷயத்தில் இந்தியா பெற்றிருந்த ஆதிக்க நிலை தேய்ந்தது. 8 புருக் கிரேசியா ரக வெகு வேகக் கப்பல்கள் வாங்கியதையடுத்து பாகிஸ்தானின் கப்பற்படை இரு மடங்கு ஆனது. பாகிஸ்தானின் 7 நவீன தாக்குதல் நீர்மூழ்கிக்கப்பல்களின் (அகோஸ்தா 3, டாப்னே 4) தாக்குதலை நினைத்துதான் இந்தியக்

— 6-ஆம் பக்கம் பார்க்க

# வனத்தில் வியட்(ன

# நகரத்தில் ஐரிஷ்



வரிப்புலிகள் சாம்ராஜ்யம் இங்கே! -இனி வாராதோ சுயராஜ்யம் இன்றே!



சின்னதாய் ஓர் சிரிப்பைச் சிந்தி; -இங்கு என்னதான் புதினம்? எனும் தம்பி!



'முரசெ..லி' யை நலம் கேட்கும் வரிப்புலிகள் தலைவன்! முன்னாலே கை கட்டி நிற்கும் பேரிளைஞன்!



படை நடத்தும் புலித்தலைவன் பத்திரிகையாளரிடம்;

● அண்மைக் காலமாக முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த அறிக்கைகள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள் இந்நிலையில் மாகாண ஆட்சியை தம்மிடம் ஒப்படைக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியைக் கோரி இருப்பது பற்றி?

எம்மைப் பொறுத்தவரை மாகாணசபை சட்டட்படியானதல்ல இதற்கான தேர்தல் இந்திய இராணுவத்தின் பின்னணியில் நடைபெற்ற தேர்தல் என்றுதான் நாம் கருதுகின்றோம். எனவே இந்த மாகாண சபையை நாம் ஏற்றுக் கொள்ளவுமில்லை. எனவே இதனைக் கலைக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளோம். முஸ்லிம் காங்கிரசின் முடிவுகள் பற்றி நாம் கருத்துத்தெரிவிக்க விரும்பவில்லை. ஏனெனில் அது ஒவ்வொரு கட்சியினுடைய சுதந்திரமான கருத்துக்களும் முடிவுகளுமாகும்.

● மாகாணசபையைக் கலைத்து தேர்தல் நடத்தப்படுவது போல் வடக்குகிழக்கிற்கு பாராளுமன்ற எம்.பிக்களை புதிதாகத் தெரிய தேர்தல் நடத்தப்பட வேண்டுமா?

எமக்கு இன்னமும் அந்தப் பிரச்சினை வரவில்லை. நாம் தற்போது மாகாணசபைத் தேர்தலைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

● ஏனெனில் எம்.பிக்களுக்கு ஒதுக்கப்படும் பணம் எல்லாம் வீணாகப் போய் விடுகின்றது. இதுபற்றி? மாகாணசபை ஏற்பட்ட பின் அவர்களை நாம் சந்தித்து எங்களுக்குச் சாதகமாக சில திட்டங்களைத் திருப்பப்பார்ப்போம். ஆனால் அவர்களுடைய தெரிவு செல்லுபடியாகாது என்பது பற்றி இன்னமும் நாம் முடிவு எடுக்கவில்லை.

● ஈழவிடுதலைப் போராட்டத்தில் இந்தியப் பிரதமர் ராஜீகாந்தி, தூதுவர் டிக்ஷித் ஆகியோரின் பங்கு பற்றி?

இந்தியத் தூதுவர் டிக்ஷித் ஒரு தேசிய இனத்தினுடைய உணர்வுகளைச் சரியாகப்புரிந்து கொள்ளவில்லை. அவர் தன்னுடைய நாட்டிற்கு விசுவாசமாக இருந்தாரே தவிர தமிழ் தேசிய இனத்தின்உணர்வுகளை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதனால் ஏற்பட்ட சில தவறான கணிப்பீடுகளை அவர் ராஜீவ் காந்திக்குத் தெரிவித்திருக்கின்றார். அதனால் ராஜீவ் காந்தியும் சில தவறான முடிவுகளை ஈழத்தமிழர் பிரச்சினையில் செயற்படுத்த வேண்டி ஏற்பட்டது. கூடுதலாக இருவரும் இந்திய நலன்களை அவர்கள் பார்த்தார்கள் ஒரு அதிகாரரீதியான தன்மைதான் அவர்களிடம் இருந்தது. அதனை நாம் இந்தியாவில் இருக்கும்போதே எதிர்த்து வந்துள்ளோம்.

★ ஈழத் தமிழர்களின் போராட்டத்தை ஒரு வெற்றிகரமான சுதந்திரப் போராட்டத்தில் வழிநடத்திச் சென்றிருக்கிறீர்கள். இதில் உங்களுக்கு ஒரு வழிகாட்டியாக யாராவது ஒருவரை நீங்கள் கருதுவீர்களா?

கூடுதலாக ஒருவர் என்றில்லை. உலகத்தில் நடந்த முழு விடுதலைப் போராட்டங்களையுமே நான் அதற்கு ஒரு வழிகாட்டியாகக் கருதுகிறேன். எல்லா ஒடுக்கப்பட்ட மக்களது விடுதலைப் போராட்டங்களையுமே நாங்கள் வழிகாட்டியாகத்தான் கருதினோம். காடுகளில் இருந்த போது எமக்கு வியட்னாமின் நினைவுகள் வந்தன. அந்த சூழ்நிலையில் தான் நாம் போராடினோம். அவர்களைப் போல் எங்களிடமிருந்த குறைந்த வசதிகளை வைத்துக் கொண்டு போராடும்போது அவர்களுடைய மனவுறுதியை நாம் உணரக்கூடியதாக இருந்தது அதேபோல் ஐரிஷ் கெரில்லாக்களைப் பற்றியும் நாங்கள் சிந்திக்கிறோம். நகரப் பகுதிகளில் நாம் போராடியபோது ஐரிஸ் கெரில்லாக்

> "ஈழத்தமிழா போர
> வரை உலகில நடந்த
> டங்களையுமே நான் அத
> கருதுகிறேன. எலலா
> விடுதலைப்போராட்டங்க
> யாகததான கருதினோ
> போது எமக்கு வியட்னா
> அந்தச் சூழநிலையில தா
> அவர்களைப்போல எம்மி
> களை வைத்துக்கொண்டு
> களது மனவுறுதியை
> இருநதது. அதேபோல்
> பறறியும நாம சிந்
> யில போராடிய போது
> முனமாதிரியாக இருந்த
> ஒடுக்கப்பட்ட மக்கள்
> ஒவ்வொன்றும் அந்தந்
> மாக அமைந்தது."

களின் பாணியே எமக்கு முன் மாதிரியாக இருந்தது. எனவே உலகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களை வைத்தும் போராட்டங்கள் ஒவ்வொன்றும் அந்தந்த நேரத்தில் உதாரணமாக அமைந்தது கூடுதலாக குறிப்பிட்ட ஒருவர் என்பதை விட சுதந்திரத்திற்காகப் போராடிய எல்லா மக்களது போராட்டங்களையும் வழிகாட்டியாக நாம் எடுத்துக் கொள்கிறோம்.

★ இதுவரை நடைபெற்ற மாகாணசபை ஆட்சியைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

அது பற்றி பெரிதாக நான் கருத்துக் கூற விரும்பவில்லை. உங்களுக்கே தெரியும் அந்த ஆட்சிமுறை எப்படி நடந்தது என்று எனவே நான் விமர்சிக்க விரும்பவில்லை.

★ தவறிழைத்து நாட்டை விட்டுத் தப்பி ஓடிய இயக்கங்கள் தமது தவறை உணர்ந்து உங்களுக்கு கீழ்





ாட்டமும் எமக்கு வழிகாட்டிதான்

# ட்ணுமியர் நினைவுகள்

# ரிஷ் கெரில்லாபாணி

ஒருவரை
ா?
ர் என்
நடந்த
ராட்டங்
ற்கு ஒரு
கருதுகி
சப்பட்ட
போராட்
ள் வழி
கருதி
இருந்த
ட்ணுமின்
அந்த
நாம்
வரிகளைப்
மிருந்த
வைத்துக்
ம்போது
புறுதி ய
க இருந்
ஐரிஷ்
பற்றியும்
ரும். நக
போரா
கரில்லாக்

ஓரணியில் வருவதற்கு தயாராக இருப்பதாக அறிவித்தால் ஏற்றுக் கொள்வீர்களா?

எங்களுக்குக் கீழ் ஓரணியில் வருவதை நாங்கள் விரும்பவில்லை. அதே நேரம் அவர்களுடைய சில தவறுகள் மன்னிக்கப்படக்கூடாத தவறுகளும் இருக்கின்றன மற்றவை மாதிரி சாதாரண தவறுகளை நாங்கள் பெரிதுபடுத்தப்போவதில்லை. நாங்கள் இன்றும் எவ்வளவோ பேரை மன்னிப்புக் கொடுத்து விட்டுக் கொண்டிருக்கிறோம். அது உங்களுக்குத் தெரியும் ஆனால் எங்களுடைய இளைஞர்களை அவர்கள் பிடிக்கும் போது சொன்னார்கள், ''போன டவை நீங்கள் எங்களை மன்னித்தீர்கள் ஆனால் அந்தப் பிழையை விடமாட்டோமென்று'' அதைத்தான் நான் இதில் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் அளவுக்கு நாங்கள் பதிலுக்குப் பதில் என்ற ரீதியில் முரட்டுத்தனமாக நடக்கவில்லை. யுத்த நேரங்களில் நடப்பது சகஜம். ஆனால் மற்ற வேளைகளில் இந்த விடயத்தில் நாம் நிதானமாகத்தான் இருக்கிறோம்.

தமிழீழக் கோரிக்கையால் இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தையில் தடங்கல் ஏதும் ஏற்படுமா?

இலங்கை அரசு நிபந்தனைகள் எதுவும் விதிக்காமலேயே பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. எனவே அதனால் தடங்கல் ஏதும் ஏற்படாது.

● இந்திய அரசாங்கம் இந்தவிடயத்தில் தவறாக நடந்து கொண்டு தன் கையையே தானே சுட்டுக்கொண்டது இனிமேல் இந்தியாவோ போன்ற அமைப்புகள் இப்படி ஒரு முயற்சி எடுக்கும் என்று எதிர்பார்க்கின்றீர்களா?

இதை நாம் திட்டவட்டமாக கூறமுடியாது இனிமேல் ஏற்படப்போகும் அரசியல் சூழ்நிலைகள் இதைத் தீர்மானிக்கும் எமது மண்ணில் காலம் காலமாக அந்நியப் படை ஆக்கிரமிப்பு இருந்துள்ளது. போத்துக்கீசர், ஒல்லாந்தர், பிரிட்டிஷ், இந்தியா ஆகியோர் இங்கு ஆக்கிரமிப்பை மேற்கொண்டனர் இனியும் என்னென்ன நடக்குமென்று கூறமுடியாது.

● தமிழ்ப் பகுதிகளில் இணக்க சபைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. எனவே நீதிமன்றங்களின் நிலை எவ்வாறு இருக்கும்?

இறுதியாக ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்திடம் எமது பிரதேசத்தின் முழு இறைமைகளும் கொடுக்கப்பட்டிருந்தது அதை நாங்கள் மீட்டெடுத்திருக்கிறோம். அவர்கள் வெளியேறும் வரை நாம் போராடி வந்துள்ளோம். அதன் பிறகு ஏற்பட்ட சிவில் நிர்வாக இடைவெளியை நிறைவு செய்யவே இணக்க சபைகளை அமைத்து செயற்படுத்துகிறோம்.

போராட்டத்தைப் பொறுத்த
நடந்த முழு விடுதலைப் போராட்
ான் அதற்கு ஒரு வழிகாட்டியாகக்
எல்லா ஒடுக்கப்பட்ட மக்களது
ாட்டங்களையுமே நாம் வழிகாட்டி
ருத்தினோம் காடுகளில் இருந்த
வியட்ணுமின் நினைவுகள் வந்தன.
யில தான நாம் போராடினோம்.
ல எம்மிடமிருந்த குறைந்த வசதி
கொண்டு போராடும போது அவர்
திறைய நாம் உணரக்கூடியதாக
நதபோல் ஐரிஷ் கெரிலலாக்களைப்
ம சிந்திக்கினறோம் நகரப்பகுதி
ப போது அவர்கள பாணி எமக்கு
இருந்தது. எனவே உலகத்தில
மக்கள் நடத்தும் போராட்டங்கள்
அந்தந்த நேரததில் உதாரண
ந்து.''


எமக்கு
ிருந்தது.
ஒடுக்கப்
வைத்தும்
ங்கொன்
ில் உதா
கூடுத
ஒருவர்
தந்திரத்
ய எல்
ராட்டங்
க நாம்
றும்.
பெற்ற
சியைப்
றீர்கள்?
க நான்
பவில்லை.
ம் அந்த
நடந்தது
விமர்
ாட்டை
இயக்
வறை
கு கீழ்

ஏனெனில் ஒருதடவை விட்ட பிழையை நாங்கள் மீண்டும் விட விரும்பவில்லை. ஏனெனில் அதனால் பாதிக்கப்படுவது இயக்கமல்ல. எங்களுக்கு ஆதரவான பொதுமக்கள் தான் பாதிக்கப்பட்டார்கள். அவர்களால் பாதிக்கப்பட்டது எமது இயக்க உறுப்பினர்கள் என்பது மிகக்குறைவு. அதைவிட உணர்வு பூர்வமான பொதுமக்களுக்குக் கூட கடுமையான தண்டனைகள் கொடுத்திருக்கிறார்கள். எங்களுடைய மன்னிப்புக்களால் பாதிக்கப்பட்டது பொதுமக்கள் என்பதால்தான் நாம் அவர்களைப்பற்றிக் கொஞ்சம் சிந்திக்க வேண்டியுள்ளது. எமது பெருந்தன்மை எமது மக்களுக்கு அழிவாகப் போய் விடக்கூடாது உண்மையாகவே அவர்கள் திருந்தினால் நாங்கள் அதைச் சிந்திக்க வேண்டித்தான் இருக்கும்.

படங்கள்:

எஸ். ராஜமோகன்







அறவழி போர்புரியும் தம்பி; இங்கு
அறிக்கை படிக்கும் தமிழ்த்தும்பி!



வதந்திப்பேயின் வயிறு கிழிந்தது!
வாய்மை இங்கே வென்று விடிந்தது!



ஈழமகன் வருகின்றான் இங்கே; நான்
இருக்கின்றேன் உயிரோடு என்றே!



தளபதிகள் புடைசூழும் தலைமகனே!

# 14000 தடுப்புக்கைதிகள் மீதான விசாரணை துரிதப்படுத்தப்படும்

தீவிரவாத சம்பவங்கள் சம்பந்தமாக பாதுகாப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 14000 சந்தேக நபர்கள் மீதான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு, விசாரணை அறிக்கை உடனடியாக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென பொலிஸ் மா அதிபர் திரு. ஏர்னஸ்ட் பெரேரா சகல பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக கைதாகி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தொகை 9000 பேர்களேயாகும். மிகுதி 4000 பேர் சுயவிருப்பத்தின் பேரில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தவர்கள்

இம்மாத நடுப்பகுதிக்குள் சகல விசாரணைகளும் முடிவுற வேண்டும் எனவும் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

# பலாலி ஆசிரிய கலாசாலை பிரதிநிதிகள் விபரம் அறிவிப்பு

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் நடப்பு வருட முதலாம் வருட நிர்வாகசபையினரின் பெயர்ப் பட்டியல் கடந்த மாதம் 29-ம் திகதி வெளியானது இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட இவர்களது பெயர் விபரம் வருமாறு;

மாணவர் மன்றம் உப தலைவர் சி. யோக மனோகரன் (கணித பீடம்) உபசெயலாளர் பொ பி. ரவீந்திரகுமார் (விவசாய பீடம்) உப பொருளாளர் ஏ பிறிஸ்க்கா (கத்தோலிக்கபீடம்) உப பத்திராதிபர் ஏ எஸ் எம். பீலிக்ஸ் (கத்தோலிக்க பீடம்) தமிழ் மன்றம் உப தலைவர்: கு ஸ்ரீராகவராஜன் (விவசாய பீடம்) உப செயலாளர் பெற்றிக் கத்தோலிக்க பீடம்) உப பொருளாளர் ச சிவசுஸ்வரி (கணித பீடம்) விளையாட்டு மன்றம் உப தலைவர் சி. நரேந்திரவேல் (விவசாய பீடம்) உப செயலாளர் தா. சிவயோகநாதன் (விஞ்ஞான பீடம்) உபபொருளாளர் ச. அமலநாதன் (கத்தோலிக்க பீடம்)

விஞ்ஞான மன்றம்- விஞ்ஞானபீடம் உபதலைவர் ஜீ. ரட்ணசிங்கம் உப செயலாளர் என் பூபாலசிங்கம் உப பொருளாளர் ரி. சி. ஜெயந்தி உப பத்திராதிபர் எஸ் குகனேஸ்வரன்

கணிதமன்றம் கணிதபீடம் உப தலைவர் அ. வரதராஜன் உப செயலாளர் க. மல்லிகா தேவி உப பொருளாளர் கு. திருகேஸ்வரன் உப பத்திராதிபர் ச. குலசுந்தரி

விவசாய மன்றம் விவசாய பீடம் தலைவர் கு. அருணாசலம் செயலாளர்:பாலகௌரி ஜெகதீசன் பொருளாளர்; நா. சுந்தரலிங்கம் பத்திராதிபர் த,பரமானந்தம்

கத்தோலிக்கமன்றம்-தலைவர் ஏ. எஸ் எம் பீலிக்ஸ் டெய்சி இம்மாகுலேற் யோசெவ் செயலாளர் லொறென் ஜீவஞ்சலி மேரி அஜந்தா இராஜதுரை பொருளாளர்;மேரி ஆன் செல்வமலர் பெனடிக்ற்,

# பயிற்சி பெற்ற யுவதிகளுக்கு 'ஒஸ்பாம்' நிதிஉதவி வழங்கும்

கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவியுடன் அரசவிவசாயப்பண்ணையில் விசேடபயிற்சி பெற்ற ஸ்கந்தபுரம் பகுதி யுவதிகளுக்கு ஒக்ஸ்பாம்நிறுவனத்தின் நிதியில் ஆடுவளர்ப்பதற்கு சகல உதவிகளும் வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்திற்கு நிதிஉதவி வழங்கும் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் இலங்கைப்பிரதிநிதி திரு. சாம்ஹென்றிக் அவர்கள் இம்மாவட்டத்தில் பல கிராமங்களைக் கடந்தவாரம் சுற்றிப் பார்வையிட்டார்.

மேலும் மரத்தளபாடத் தொழில்களுக்கும் உதவி வழங்கப்படவுள்ளதாகவும் இதை ஏற்பாடுசெய்த அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் தலைவர் தெரிவித்தார். (35)

## இந்திய - பாக்...

கப்பற்படை பயப்படுகிறது. இந்திய நீர்மூழ்கிகளை விட வேகத்தில் சிறந்தவை: இருக்குமிடம் கண்டுபிடிப்பது கஷ்டம்; வளைந்து நெளிந்து பயணம் செய்யும் சக்தி அதிகம். நீர்மூழ்கிக் கப்பலின் நடமாட்டம் கண்டுபிடிக்கும் ராடாரின் வீச்சிற்கு வெளியே இருந்தபடி இந்தப்பாகிஸ்தான் நீர்மூழ்கிக் கப்பல்கள் ஹார்ப்பூன் ஏவுகணை செலுத்தி இந்தியக்கப்பற்படை கப்பலையோ இந்திய நிலப்பகுதி இலக்குகளையோ அழிக்க முடியும். பாகிஸ்தான் தன் கப்பற்படை சிறிதாக இருப்பதாகக் காட்டி நீர் மூழ்கிக் கப்பல் பலத்தை வைத்தே இந்தியக் கப்பற்படையின் கடல் ஆதிக்க முயற்சியை முறியடிக்கத் திட்டமிடுகிறது.

சோவியத் தயாரிப்பான சக்ரா என்ற அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை இந்தியா வாடகைக்கு எடுத்திருப்பதால் கூடுதல் பலம். அணுமின் சக்தி கொண்டு இயங்கும் சக்ரா அதிவேக நீர்மூழ்கி; வாரக் கணக்கில் தண்ணீருக்குள்ளேயே இருக்கக் கூடியது. எனவே இதன் இருப்பிடத்தை அறிவது கஷ்டம். சக்ராவில் வெகுதூரம் பாயும் டார்பிடோக்கள், தானியங்கி ஏவுகணைகள், நீருக்கடியில் உள்ள இலக்குகளைக் கண்டறியும் கருவிகள் எல்லாம் பொருத்தப் பட்டுள்ளன கப்பல்கள் நீர்மூழ்கிகளைக்கண்டு பிடிக்க முடியாது. தொலை தூரத்தில் இருந்தபடியே சக்ராவேட்டையாடும் ஆனால் சுருக்கமான சண்டையில், பாகிஸ்தான் நீர்மூழ்கிகள் இந்தியக் கப்பல் வர்த்தகத்தை நிலைகுலையச் செய்யமுடியும் இந்தியப் பகுதி இலக்குகளைத் தாக்கியழிக்க முடியும் இந்த ஆற்றலைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை

மோதல் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் செலவை இருதரப்புமே தாங்க முடியாது என்பதே, சண்டை வராமல் தடுக்கும் பெரிய காரணம், போர் நடத்த தினசரி 500 முதல்700 கோடி வரை ஆகும் என்பதால் இரு தரப்புமே சண்டையை நீடித்து நடத்த முடியாது. காஷ்மீர் பிரச்சனையை வைத்துப் பாகிஸ்தான் முழுமூச்சில் சண்டை துவக்காது என்பதுதான் இன்றைய அறிகுறி. சற்று 'செலவு குறைவான' முறையைப் பாகிஸ்தான் கடைப்பிடிக்கும். அதாவது, காஷ்மீரில் தொடர்ந்து தலையிட்டு நாசவேலை, கலகம் அதிகரிக்கச் செய்யும். இதற்காக காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு இன்னும் பயங்கர ஆயுதங்கள் தரும், வெடிகுண்டுகள் அனுப்பும்; யுத்த தந்திரம் வகுக்க, தாக்க வேண்டிய இலக்குகளைக் காட்ட சிவிலியன் உடையில் ஊடுருவல்காரர்களை அனுப்பும்.

இதுநாள் வரை இல்லாத அளவு தீவிரத்தோடு பாகிஸ்தான், காஷ்மீர் பிரச்சனையில் நம்பிக்கை வைத்திருக்கிறது; இந்திய – பாகிஸ்தான் பதற்ற நிலையும் அபாயமட்டத்திற்கு வந்துவிட்டது. அதைத் தாண்டி விட்டால் துணைக் கண்டம் யுத்தத்தால் ரத்தக் களறியாகும். கோடிக்கணக்கில் செலவாகும். இது இரு நாடுகளுமே விரும்பாதது. முடியாதது.

## சுவையான செய்திகள்

### புன்னகையின் பொருள் என்ன?

உலகப் புகழ் பெற்ற 'மோனலிசா' ஓவியத்திலிருக்கும் பெண்ணின் புன்னகைக்குப் பொருள் புரியாமல் இத்தனை ஆண்டுகள் தலையைப் பிய்த்துக் கொண்டவர்களுக்கு அதன் மர்மத்தை உடைத்திருக்கின்றார் ஒரு கலிபோர்ணிய டாக்டர். அது 'பெல்ஸ் பாலசி' என்று சிலருக்கு முகத்தில் தோன்றும் ஒரு தற்காலிகமான பாதிப்பாம், 'மோனலிசா' ஓவியத்திற்கு மாடலாய் நின்ற பெண்மணியின் முகத்தின் இடது பக்கம் இந்த 'பெல்ஸ் பாலசி' என்ற நரம்புப் பாதிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம். அதனால் விநோதமாய் புன்னகை புரிவது போல் ஓவியம் அமைந்திருக்கலாம் என்பது டாக்டரின் கணிப்பு.

### ''அதிகாலைப் பறவைகள்'

யூகோஸ்லேவியாவில் வேலை செய்கின்றவர்களை அதிகாலைப் பறவைகள்'' என்று அழைக்கின்றனர். காரணம். அங்கு அலுவலகங்கள்அனைத்தும் அதிகாலை 6.30 க்கே தொடங்கிவிடுகின்றது இந்த ''நல்ல நேரம்'' எங்கள் நாட்டிற்கும் வந்தால்......

### ''பெரிய'' மனிதனாக வேண்டும்!

உலக மகா குண்டு என கின்னஸ்காரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஆல்பர்ட் ஜாக்ஸன் பிறக்கும் போதே 9.6 கிலோவாம் இவர். அது பரவாயில்லையே! 14 வயதாகும் போது 290 கிலோ இருந்தார் என்றால் அது சாதாரண விடயமா? இன்று அவருடைய எடை 385 கிலோ! இடுப்பளவு 255 செ.மீ! இலட்சியம் என்ன தெரியுமா? ஆயிரம் இறாத்தல் எடையுள்ள மனிதராக வேண்டும் என்ற மகோன்னத இலட்சியம்! அதாவது சுமார் 428, கிலோ.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### பாதசாரிகளே கவனம்! கல்லூரி வீதியில் பொறிக்கிடங்கு

ஆசிரியர்
முரசொலி

காங்கேசன்துறையில் பிரபல கல்லூரி அமைந்திருக்கும் கல்லூரி வீதி சென்ற 2 வருடங்களாக மிகவும் சீர் கெட்ட நிலையில் உள்ளது. இவ்வீதியால் தினமும் 2000 சைக்கிள்களுக்குக்குறையாமல் செல்கின்றன. இவ்வீதியில் அமைந்திருக்கும் ஓர் மதகு சென்ற மாரிமழையின்போது நடுவில் மூன்றுஅடி விட்டமுள்ள குழி ஏற்பட்டுவிட்டது. இக்குழி சில சமயங்களில் மரண ஆபத்தை உண்டாக்கலாம். அத்துடன் கல்லூரி விட்டுச்செல்லும்போது மாணவர்கள் பெரிதும் சிரமத்துக்குள்ளாகின்றார்கள் ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியைத் திருத்த தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகின்றேம்.

தையிட்டி,
காங்கேசன்துறை

சி. சிவமயம்

### காரைநகர் இலங்கை வங்கி இதுவரை திறக்கப்படாததேன்?

ஆசிரியர்
முரசொலி

காரைநகரில் ஒரு இலங்கை வங்கிக் கிளையை திறப்பதற்காக ஒரு கட்டிடம் கட்டப்பட்டு பூர்த்தியடைந்த நிலையில் சில வருடங்களாக சும்மா கிடக்கிறது. இவ்வளவு காலமும் நிலைமை சீரில்லாததால் திறக்க முடியவில்லை என நாம் கருதினோம்' தற்போது நிலைமை சீர்நிலையில் உள்ளதால் இலங்கை வங்கி அதிகாரிகள் இக் கிளையை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா?

காரைநகர்

இ சிவனருள்பாதம்.

## வவுனியாவில்

# மூன்று முஸ்லிம்கள் கொலைபற்றி விடுதலைப்புலிகள் விசாரணை

மூன்று முஸ்லிம்கள் வவுனியாவில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். வவுனியா மாவட்டத்தில் ஆண்டியா புளியங்குளம் என்னுமிடத்தில் இந்த கொலைச்சம்பவம் வெள்ளிக்கிழமை பகல் நடைபெற்றுள்ளது.

காலித்தீன் (36) முஸ்தபா (47) தௌபீக் (07) ஆகிய முஸ்லிம்களே கொல்லப்பட்டவர்களாகும்.

இஸ்லாம் மதக் கொள்கை வேறுபாடு காரணமாக ஏற்பட்ட மோதலிலேயே மேற்படி மூன்று முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

சம்பவம் நடந்த இடத்தில் நான்கு கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. மேலும் பலர் இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்தலத்திற்கு சென்று விசாரணைகளை நடத்தியதில் கொலைச்சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கிகள் சிலவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் ஐந்து முஸ்லிம்கள் புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். (11)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி



பட்டினி ராகம பாடினள் !– அவள்
பகலிரவாக வாடினள் !– உயர்
நித்திய விடுதலை நாடினள் !– அவள்
நீதியின் வேரைத் தேடினள் !–

சமுத்திர விலாஸ்
பிள்ளையார் கோவிலடி, மண்கும்பான்.

04023

# ரமழான் சிந்தனைகள்

## ரமழானின் சிறப்பு

அருமை நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:- ரமழான் மாதத்தில் முன் சென்ற எந்த உம்மத்துக்கும் கொடுக்கப்படாத ஐந்து பாக்கியங்களை என் உம்மத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

1) அல்லாஹ்வினிடத்தில் நோன்பாளியின் வாய்வாடை கஸ்தூரியின் மணத்தைக் காட்டிலும் நறுமணமுள்ளதாக இருக்கும்.

2) நோன்பாளிகள் நோன்பு திறக்கும் வரை அவர்களுடைய பாவங்களை மன்னித்தருளுமாறு (அல்லாஹ்விடத்தில்) நீரில் வாழும் மீன்கள் வரையிலும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றன.

3) அல்லாஹ் நோன்பாளிக்காக சுவர்க்கத்தை அனுதினமும் அலங்கரிக்கச் செய்து அந்த சுவர்க்கத்தை நோக்கி என்னுடைய நல்லடியார்கள் (உலகில்) தமக்குச் சம்பவிக்கும் சிரமங்களை வீசி எறிந்துவிட்டு வெகு சீக்கிரத்தில் உன்னிடம் வந்து சேருவார்கள் என்று கூறுகிறான்.

4) இந்த மாதத்தில் அக்கிரமம் செய்யும் சைத்தான்களுக்கு விலங்கிடப்படுகிறது. அவைகள் ரமழான் அல்லாத மாதத்தில் எந்தெந்த தீமைகளில் பிரவேசித்தனவோ அந்த தீமைகளிலெல்லாம் இந்த மாதத்தில் பிரவேசிப்பதில்லை.

5) ரமழான் கடைசி இரவில் நோன்பாளிகளுக்கு மன்னிப்பு அளிக்கப்படுகிறது. அவ்வாறு மன்னிக்கப்படும் இரவு லைலதுல்கத்ரு இரவா? என்று ஸஹாபாக்கள் (தோழர்கள்) வினவியதற்கு; கூலிக்காரனுக்கு வேலை முடிந்தவுடன் கூலி கொடுப்பதுதான் வழக்கம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நூல்: தர்கிப்

## இன்று நாள் எப்படி?

மேடம்: பாதாவழியுதவி, வாகன சுகம், வணிகர்கள் கடற்தொழில் இயந்திரத் தொழில் செய்வோர் இலாபம்.

இடபம்: உயர்பதவி, வெளியூர்ப் பிரயாணம், தேடியவர் வருகை, புதுத்தொழில், மனையிற் சுபகாரியம்.

மிதுனம்: வாக்குப்பலம், பணவரவு, இளைய சகோதரவழியுதவி, புதுத்தொழில், வணிகர்கள் இலாபம்.

கடகம்: பெண்களாற் கவலை, பிரிந்த காதலர் ஒன்று சேருவர், பெரியோராசி, புதுத் தொழில்.

சிங்கம்: திருடர் பயம், வாகன மாற்றம், தேடியவர் வருகை, விவாகத்தடை, புதுச்சிநேகிதம்.

கன்னி: உயர்பதவி, கல்வியாற் தொழில், காதலர் மகிழ்ச்சி, பணவரவு, வாகன சுகம், புதுத்தொழில்.

துலாம்: பிதாவழியுதவி, தேடியவர் வருகை, உயர்பதவி, வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம்.

விருச்சிகம்: பொருள் நஷ்டம், இனசனபகை, தேடியவர் வருகை, வாகன சுகம், புதுத் தொழில்.

தனுசு: எண்ணியது நடக்கும், சுகஜீவியம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

மகரம்: விவாக நிச்சயம், தேடியவர் வருகை, உயர் பதவி, உத்தமர்களுறவு, சுகஜீவியம்.

கும்பம்: வாக்குப்பலிதம், வாகன மாற்றம், மாமன் வழியுதவி, புதுத்தொழில், புகழ் தேடிவரும்.

மீனம்: வாக்குக்கலகம், பொருள் நஷ்டம், பிரயாணத்தடை, இளைய சகோதர வழியுதவி, வணிகர்கள் கடற் தொழில் மூலம் இலாபம்.

யாழ் சோதிடர்
அ. அரியநாயகம்

## தொழிற் பயிற்சிகளை ஆரம்பிக்கத் தீர்மானம்

பண்ணாம் அண்ணா கலை மன்றத்தின் 19 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது படித்த வேலையற்ற இளைஞர்களின் நலன் கருதி போரூட், ரெட்பானா போன்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று தொழிற்பயிற்சிகளை ஆரம்பிப்பதுஎன்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தலைவர் திரு. க. வே. குமரகுரு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கிராமத்திலுள்ள வறிய குடும்பங்களை சேர்ந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவி செய்வது என்ற தீர்மானம் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது (13

## இன்று தீர்மானம்

பாராளுமன்றம் நாளை மீண்டும் கூடும்போது சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதா இல்லையா என்பதுபற்றி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இன்று தீர்மானிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### இலங்கைத் தமிழர் பிரச்சனையில்

# இராணுவத்தை ராஜீவ் அரசு தவறுகப் பயன்படுத்தியது

### - தன் நிலையில் கலைஞர் இறுக்கம்

(சென்னை)

இந்திய அமைதிகாக்கும் படை தொடர்பான சர்ச்சை தமிழ்நாடு சட்டசபையில் நேற்று உக்சக்கட்ட சூடுபிடித்தது.

முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி எதிர்க்கட்சியினரின் கண்டனக்கணைகளுக்கு காரசாரமான பதிலளித்வதுடன் தன் நிலைப் பாட்டிலிருந்து சற்றும் வழுவாதவராக இருந்தார்.

இந்தியப் பாதுகாப்புப்படையினரைப் பற்றித்தான் ஒரு போதும் அவதூருகப்பேசவில்லை என்று கலைஞர் மீண்டும் நேற்றுத் தெளிவு படுத்தினர்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அமைதிகாக்கும்படை தொடர்பாகக் கலைஞர் வெளியிட்ட சில கருத்துக்கள் தொடர்பாக எதிர்க் கட்சித்தலைவர் திரு. எஸ் ஆர். ராதா இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு குமரி ஆனந்தன் இக்கட்சியின் கொறடா தீ. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கொண்டுவந்த உரிமை மீறல் பிரச்சினைக்குக் கலைஞர் பதிலளித்தார்.

இலங்கைத்தமிழர் பிரச்சினையில் திரு. ராஜீவ் காந்தி தலைமையிலான, முந்தைய அரசு இராணுவத்தைத் தவருகப் பயன்படுத்தியது என்று தாம் குறிப்பிட்டதாகவும் இது பற்றிய அணுகுமுறையில் கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லை. என்றும் கலைஞர் கூறினர்.



இக்கருத்து வேறுபாடுகளை சபையில் உரிமைமீறல் செயலாகக் கொள்ள முடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

முதல்வரின் விளக்கத்தைத் தொடர்ந்து இப்பிரச்சினையில் தனது தீர்ப்பைப் பின்னர் தெரிவிப்பதாக சபாநாயகர் டாக்டர் தமிழ்க்குடிமகன் தெரிவித்தார்.

### சோவியத் யூனியனின்

## மிரட்டுதல் கண்டு லிதுவேனியா மிரட்சி?

(மாஸ்கோ)

லிதுவேனியா தனது ஒருதரப்பான சுதந்திரப் பிரகடனத்தை விலக்கிக்கொள்ள வேண்டுமென சோவியத் யூனியனின் தலைவர்கள் பலரும் அக்குடியரசுக்கு நெருக்குதல் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சமாதான இணக்கத்துக்கு லிதுவேனியா விருப்பம் கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

சோவியத் ஜனதிபதி திரு. கொர்பச்சேவ் விடுத்த கடும் எச்சரிக்கையை அடுத்து லிதுவேனியக் குடியரசுத் தலைவர்கள் மத்திய அரசுடன் இணங்கிப் போகும் வகையில் பேச்சுவார்த்தை நடத்த மனப்போக்குக் கொண்டுள்ளனர் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## 2-ம் கட்ட நிவாரணம்

பலாலி மேற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ளவர்களில் இரண்டாம் கட்ட நிவாரணம் 1000 ரூபா பெறுதவர்கள் 9-ம் திகதி காங்கேசன் துறை இலங்கை வங்கிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

வயாவிளான் பகுதிக்கு 5-ம் திகதி இப்பணம் ஊக்கிளைகளில் வழங்கப்படும்.

# லண்டனில் மூண்ட கலவரம் கைதிகளும் கட்டு மீறினர்!

(லண்டன்)

இங்கிலாந்தில் அரசினுல் கொண்டுவரப்பட்டுள்ள புதிய வரிவிதிப்பு முறையை ஆட்சேபித்து லண்டன் மாநகரில் பெரும் கலவரங்கள் நிகழ்ந்துள்ளன.

இக்கலவரங்களால் 133 பேர் காயமடைந்தனர் என்றும் 141 பேர் கைதாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவங்கள் குறித்து உயர்மட்டப் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

பிரிட்டனில் உள்ள மிகப் பழைய சிறைச்சாலை ஒன்றிலிருந்து நூற்றுக்கணக்கான கைதிகள் வெளியே வந்து போது உடைமைகளுக்குத் தீ வைத்தும் வேறு வன்செயல்கள் புரிந்தும் குளப்பம் விளைவித்தனர்

சுமார் ஐம்பது பேர் இவ் வன்செயல்களால் காயம் அடைந்தனர்.


# மீண்டும்



## இலங்கை வங்கியின் விசேட கருமபீடம்

மானிப்பாய் மருதடி ஆலய முன்றலில்
03.04.1990 தொடக்கம் 15.04.1990 வரை

மருதடியானை மனம் நினையும் போது
மனம் போன்ற வாழ்வை வழங்கும்
வங்கியையும் நாடிடுவீர்

இலங்கை வங்கி
யாழ். மாவட்டம்.

04024

யாழ் பல்கலைக்கழக

## விவசாயபீடக் கட்டிட அமைப்பு வேலைகள் ஆரம்பம்

இரணைமடு 155 கட்டையில் அமைக்கப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கான அடிக்கல்நாட்டுவிழா கடந்தவாரம் உபவேந்தர் திரு. துரைராசா அவர்களால் நாட்டப்பட்டது.

இவ்விழாவிற்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு வே. மாணிக்கவாசகர் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். இக்கட்டிடம் பல கோடிரூபா செலவில் அமைக்கப்படவுள்ளதுடன் இங்கு பொறியியல் பீடமும் வெகுவிரைவில் அமைக்கப்படவுள்ளது. (35)

## மானிப்பாய் ஆலய உற்சவத்தில் இலங்கை வங்கிக் கருமபீடம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவ தினங்களாகிய 03-04-90 முதல் 15-04-90 வரை இலங்கை வங்கி விசேட கருமபீடமொன்றை ஆலய முன்றலில் அமைக்கவுள்ளது.

விசேட கருமபீடத்தின் முதல் நாளாகிய 03 04.90 (செவ்வாய்க்கிழமை) இன்று நடைபெறவிருக்கும் ஆரம்ப வைபவத்தில் திரு சிவகுருநாதர் தலைமையில் ஆலய தருமகர்த்தாக்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ள இருக்கின்றார்கள்.

இக்கரும பீடத்தில் சிறுவர் சேமிப்புக் கணக்குகள், சேமிப்புச் சான்றிதழ்கள், நிலையான வைப்புகள், விசா கார்ட் பத்திரங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

## அன்னை பூபதி நினைவாக பூநகரியில் உண்ணாவிரதம்

மறைந்த அன்னை பூபதியின் நினைவாக பூநகரியின் நல்லூர் சாமிப்புலம் பகுதிகளில் சுழற்சிமுறையிலான உண்ணாவிரதம் நடைபெற்றுவருகின்றது.

இந்தஉண்ணாவிரதம் எதிர்வரும் 19-ம் திகதி வரை நடைபெறும். கடந்த 29-ம் திகதியில் இருந்து திரு து, ஆனந்தராசா திரு கு கதிரேசு, திருமதி பாலசுபிரமணியம் திரு செ. பாலசுப்பிரமணியம் உட்படபலர் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்.

## சண்டிலிப்பாய் உ, அ. அதிபர் பிரிவு மக்களுக்கு நிவாரணம்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்உள்ள மாதகல் கிழக்கு, பெரியவிளான் மாதகல், பண்டத்தரிப்பு பகுதிகளுக்கு எதிர்வரும் 5ம் 6ம் 7ம் திகதிகளில் 1000 ரூபா நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ஆஸ்பத்திரி வீதி இலங்கைவங்கிக்கிளையின் செயலக அதிகாரிகள் கருமபீடத்தில் இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

## பலஸ்தீன தலைவர் யாசீர் அரபாத் மே மாதம் இலங்கை வருவார்

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யாசீர் அரபாத் அடுத்தமாதமளவில் இலங்கை வரவுள்ளார்.

அண்மையில் இந்தியா சென்ற சபாநாயகர் ஜனாப் எம். எச். முஹமட்டை டில்லியில் சந்தித்த போதே அரபாத் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடுவது என ஜனாதிபதி எடுத்த முடிவைப் பாராட்டிய அரபாத் இது குறித்து தாம் ஜனாதிபதியை நேரில் சந்தித்து தனது பாராட்டை தெரிவிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (05)

பிரபாகரனை...

இது குறித்து ஈரோஸ் வட்டாரங்களுடன் முரசொலி தொடர்புகொண்டபோதே மேற்படி தெரிவிக்கப்பட்டது

5 மாதத்துக்குள்...

முழுவதும் செப்டெம்பர் மாதத்தினுள் நிறைவு செய்யப்படுமென கொழும்பு தொலைத் தொடர்புத்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதுவருடத்தை...

15-ம் திகதியும் மாலை 5 45 மணிக்கு ரயில்சேவை இடம் பெறும். இவ்ரயில் யாழ் புகையிரத நிலையத்தை 6 10 மணிக்கு வந்தடையும். (03)


### திருமலையில் முரசொலி

முக்கிய செய்திகளை முந்தித்தரும் முரசொலியை திருமலை வாசகர்கள் இன்றுமுதல் தினசரி பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

முரசொலியின் திருமலை முகவராக

ஏ. எஸ். சபாநாதன்
சுசி புக்கிங் சென்ரர்
(வீரபாலன் முன்பாக)
மெயின் வீதி,
திருமலை.

நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்! எங்கள் முகவரை நாடுங்கள்!


நிவாரணம் பெறுவதற்காக; 1983 ஜூலை முதல்

# 3565 மரண விபரங்கள் யாழ். செயலகத்தில் பதிவு

யாழ்மாவட்டத்தில்1983-ம் ஆண்டு யூலை மாதம் 24-ம் திகதிக்குப் பின்னர் இடம் பெற்ற வன்செயல்களின் போது 3565பேர் மரணமடைந்து நிவாரணத்திற்காக யாழ் செயலகத்தில் பதியப்பட்டுள்ளார்கள்

அத்துடன் இக்கால கட்ட வன்செயல்களின் போது 1325 பேர் காயமடைந்து நிவாரணத்திற்காகப் பதியப்பட்டுள்ளார்கள்,

மரணமடைந்த 2014 பேரினது விண்ணப்பங்கள் நிவாரணம் வழங்க ஆயத்த நிலையில் உள்ளபோதும் இதுவரை 551 பேருக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் காயமடைந்த 298 பேருக்கு நிவாரணம் வழங்க ஆயத்த நிலையில் உள்ளபோதும் 71 பேருக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. (03)

## உணவுப்பொருட்களில் மோசடி அமைதிப்படை அதிகாரி கைது

(புதுடில்லி)

இலங்கையில் இந்தியப்படைகள் தங்கியிருந்தபோது அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் மோசடிகள் செய்த இந்தியஇராணுவஅதிகாரி குப்தா கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியப்படைகளுக்கென அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருட்களில் மோசடிகள் செய்த மேஜர் ஜெனரல் குப்தாவை கைது செய்யடில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்தே இவர் கைது செய்யப்பட்டார் இந்தியப் படைகளுக்கு இந்தியாவில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட முட்டைகளை இவர் கூடிய விலைக்கு வெளியிடங்களில் விற்பனைசெய்து அப்பணத்தை தாமே எடுத்துக் கொண்டார். இந்தியச் சந்தை விலைப்படி 100 முட்டைகளை 53 ரூபாவிற்கு கொள்வனவு செய்து 79 ரூபாவிற்குக் கொள்வனவு செய்ததாகப் போலி ரசீதுகளை தயாரித்த குப்தா அத்துடன் விடவில்லை. ஒரு கிலோ கோழி இறைச்சியை 63 ரூபாவாக வாங்கி 73 ரூபா எனப் போலிக் கணக்கு எழுதினார்.

தென் பிராந்திய உணவு வழங்கும் பிரிவுத் தளபதியான குப்தா மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பெப்ரவரி 27-ம் திகதி முரசொலி செய்தி வெளியிட்டமை தெரிந்ததே.

## யாழ் கிளி மாவட்டங்களில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பம்

1989ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இவ்வாண்டு யாழ் கிளிநொச்சி மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கூட்டுறவுச்சங்கங்கள், மீன்பிடி அபிவிருத்திச்சபைகள், பிரதேசஉள்ளூராட்சிநூலகங்கள், சுகாதார திட்டங்கள் போன்றவை நிறைவுசெய்யப்படவுள்ளன.

அத்துடன் புதுக்காட்டுச் சந்தியில் இருந்து மருதங்கேணி வரை மின் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது இதற்கு அருகில்உள்ள பல கிராமங்கள் இதனால் பயன்பெறும். இதற்கு 36 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (03)

## வடமராட்சியில் அபிவிருத்தி வேலை துரிதம்

வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப் பட்டு வந்த பாடசாலை அபிவிருத்தி வேலைகள் யாவும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பாடசாலைகளின்புதியகட்டட அமைப்பு வேலை மற்றும் திருத்த வேலைகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. விடுமுறை முடிவடைய முன்னர் பலவேலைகள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (03

யாழ்-கொழும்பு மெயில் ரயில்

## 2-ம் வகுப்புப்பெட்டி நிறுத்தப்பட்டு மேலதிக 3-ம் வகுப்பு பெட்டி

வட பகுதிக்கான மெயில் ரயிலில் 5-ம் திகதி முதல் இரண்டாம் வகுப்பு உறங்கலிருக்கைப் பெட்டி நிறுத்தப் படவுள்ளது.

இதற்காக 56 ஆசனங்கள் கொண்ட 3-ம் வகுப்பு உறங்கல் இருக்கைப்பெட்டி இணைக்கப்படுமென கொழும்பு கோட்டைப் புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டு, மெயில்...

போதே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இவர் ரயில் பயணத்தின் போது தமது அடகுநகைகளை மீட்டுவருவது பற்றி சகபிரயாணிகளிடம் அளவளாவும்போது தெரிவித்திருந்தார்.

## தொலைபேசி வயர்கள் களவு

நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ் வீரசிங்கம் மண்டபப் பகுதியில் ரெலிபோன் வயர்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. இதனால் நேற்று யாழ் நகரின் முக்கிய தொலைபேசிகள் செயலிழந்தன.

சிறிது நாட்களாக இத் திருட்டுக் குறைந்திருந்து தற்போது அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பல சிரமங்களின் மத்தியில்இயங்கிவரும் தொலைத் தொடர்புத் திணைக்களம் இன்று இத்திருத்தவேலையை மேற்கொள்ளவுள்ளது. (03)

நான்கு நாட்களாக...

வாகனம் ஒன்று மிதித்ததால் புழுக்கள் நெளியும் காட்சியை காணமுடிந்தது அத்துடன் தனது நாற்றம் அப்பகுதியின் சமநிலையை வெகுவாகப் பாதித்தது. வீதி ஒழுங்கு கடைப்பிடிப்பவர்களும் இந்த நாற்றத்திற்கிடையே தான் கடமை புரிகின்றார்கள், அவர்கள் சைகைக்காட்டி வீதி ஒழுங்கை கடைப்பிடிக்கும் போது மக்கள் இந்த நாயைக் காட்டி விட்டுச் செல்கிறார்கள். (03)

## ஒரு சூலில் மூன்று குழந்தைகள்

யாழ், வைத்தியசாலையில் பிரசவத்திற்கென அனுமதிக்கப்பட்ட, விஸ்வமடு, உடையார்கட்டு என்னும் இடத்தைச் சேர்ந்த வேலாஜி (வயது 38) என்ற தாய்க்கு ஒரே நேரத்தில் மூன்று குழந்தைகள் பிறந்துள்ளன. சத்திர சிகிச்சையின் பின்னர் பிறந்த ஒரு ஆணும், இரு பெண்களுமான இம் மூன்று குழந்தைகளும் நலமாக உள்ளதாக வைத்தியர் தெரிவித்துள்ளனர்.

மட்டுநகரில்...

ஆள் மாறாட்டம் செய்வோர் ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு மக்கள் முன் நிலையிலும் நிறுத்தப்படுவர். ஆள்மாறாட்டம் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பரீட்சை மேற்பார்வையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப் படுகிறது. (05)


### அறிவித்தல்

எமது நிறுவனத்தில் விளம்பர சேகரிப்பாளராகக்கடமையாற்றிய திரு ம. நிமலராஜன் என்பவர் 1-4-90 இல் இருந்து எமது சேவையில் இல்லை என்பதையும் இத்திகதியிலிருந்து அவருடன் சம்பந்தப்பட்ட எந்தவித கொடுக்கல்வாங்கல்களுக்கும் நாம்பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் அறியத்தருகிறோம்.

பொது முகாமையாளர்
முரசொலி


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ், [பிறைவேட்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ம் இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 03.04.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது